# 11th History Lesson 17 Questions in Tamil

## 17] அரசு மற்றும் பேரரசு உருவாக்கம்

1. பௌத்தம், சமணம் ஆகிய இரு அவைதீக மதங்களும்____________வேத மதத்தின் கோட்பாடுகளுக்கு முரணானவை.

A) வைணவம்

**B) வைதீக**

C) மத்துவ

D) மேற்கண்ட எதுவுமில்லை

**விளக்கம்: பொ.ஆ.மு. ஆறாம் நூற்றாண்டிலிருந்து மூன்றாம் நூற்றாண்டு வரை வட இந்தியா பல முக்கியமான அரசியல், சமூக மாற்றங்களை எதிர்கொண்டது. பௌத்தம், சமணம் இந்தியாவின் முக்கியமான புதிய மதங்களாக உருவாகின. ஏராளமான மக்கள் இந்த மதங்களைப் பின்பற்றினார்கள். இவ்விரு அவைதீக மதங்களும் வைதீக வேத மதத்தின் கோட்பாடுகளுக்கு முரணானவை.**

2. பெரிய அரசுகளை ஆட்சி செய்த அரசப் பதவிகள் கீழ்க்கண்ட எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) சக்ரவர்த்தி

B) ஏக்ராட்

**C) A B இரண்டும்**

D) மேற்கண்ட எதுவுமில்லை

**விளக்கம்: பெரிய அரசுகள் சக்ரவர்த்தி அல்லது ஏக்ராட் என்ற உயர்ந்த அரச பதவிகளால் ஆட்சி செய்யப்பட்டன. மேலும் இன்றைய பீகார், கிழக்கு உத்திரப்பிரதேசம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய கங்கைச் சமவெளியில் மையப்படுத்தப்பட்ட ஒரு பேரரசு உருவானது. இது இப்பகுதியின் சமூக, பொருளாதார, நிர்வாக அமைப்பைப் பெரிதும் மாற்றியது.**

3. கூற்று A: சமவெளிகளும், கங்கை மற்றும் அதன் துணைநதிகள் போன்ற வற்றாத நதிகளிலிருந்து கிடைத்த நீர்வளமும் பெரிய நாடுகள் உருவாவதற்குச் சாதகமாக இருந்தன.

காரணம் R: இந்த ஆறுகள் வணிகம், பயணங்கள் ஆகியவற்றுக்கு முக்கியமான நீர்வழிப்பாதைகளாகவும் பயன்பட்டன.

**A) கூற்று A மற்றும் காரணம் R இரண்டும் சரி, மேலும் காரணம் R கூற்று A க்கான சரியான விளக்கமாகும்.**

B) கூற்று A மற்றும் காரணம் R இரண்டும் சரி, மேலும் காரணம் R கூற்று A க்கான சரியான விளக்கமல்ல.

C) கூற்று A சரி, மற்றும் காரணம் R தவறு

D) கூற்று A தவறு மற்றும் காரணம் R சரி

4. கூற்று 1: புத்தரின் சமகாலத்துவரான பிந்துசாரர் மகதத்தில் ஒரு பேரரசை நிர்மாணிக்கும் பணியைத் தொடங்கினார்.

கூற்று 2: அதன் பிறகு அவரது புதல்வர் அஜாதசத்ருவாலும், பின்னர் நந்தர்களாலும் இது மேலும் வலுவாக்கப்பட்டது.

A) கூற்று 1 சரி, 2 தவறு

**B) கூற்று 1 தவறு, 2 சரி**

C) 1 2 இரண்டும் சரி

D) 1 2 இரண்டும் தவறு

**விளக்கம்: புத்தரின் சமகாலத்துவரான பிம்பிசாரர் மகதத்தில் ஒரு பேரரசை நிர்மாணிக்கும் பணியைத் தொடங்கினார்.**

5. மௌரிய வம்சத்தை தோற்றுவித்தவர்_____________

A) சமுத்திரகுப்தர்

B) பிந்துசாரர்

C) பிம்பிசாரர்

**D) சந்திரகுப்த மௌரியர்**

**விளக்கம்: சந்திரகுப்த மௌரியர் உருவாக்கிய மௌரிய வம்சத்தின் தோற்றத்தோடு இந்தப் பேரரசு தனது புகழின் உச்சத்தை அடைந்தது. முதல் மூன்று மௌரிய அரசர்களான சந்திரகுப்தர், பிந்துசாரர், அசோகர் ஆகியோர் நன்கு அறியப்பட்ட மௌரிய அரசர்கள் ஆவர்.**

6. கீழ்க்கண்டவர்களை காலமுறைப்படி வரிசைப்படுத்துக.

A) சந்திரகுப்தர், அசோகர், பிந்துசாரர்

B) பிந்துசாரர், அசோகர், சந்திரகுப்தர்

C) பிந்துசாரர், சந்திரகுப்தர், அசோகர்

**D) சந்திரகுப்தர், பிந்துசாரர், அசோகர்**

7. இலங்கையில் கிடைத்த நூலான மகாவம்சம்____________மொழியைச் சார்ந்ததாகும்.

A) சமஸ்கிருதம்

B) பாரசீகம்

C) அரபு

**D) பாலி**

8. வரலாற்றின் தொடக்க காலத்தில் இருந்த நகரத்தின் அமைப்பு மற்றும் கட்டிடங்களின் அமைப்புப் பற்றி அறிந்துகொள்ள தேவையான முக்கிய சான்று_____________

A) கல்வெட்டு

B) செப்பேடு

**C) தொல்லியல்**

D) இலக்கியம்

**விளக்கம்: வரலாற்றின் தொடக்க காலம் பற்றி வரலாற்றாளர்கள் அறிந்து கொள்ள ஏராளமான தகவல்களைத் தரும் முக்கியமான சாதனங்களாகத் தொல்லியலும் கல்வெட்டியலும் உள்ளன. குறிப்பாக, தொல்லியல் மிகவும் முக்கியமானது. ஏனெனில், தொல்லியல் அகழ்வாய்வுகளின் மூலம் நகரப் புறத்தோற்றம் பற்றி, அதாவது நகரத்தின் அமைப்பு, கட்டிடங்களின் கட்டுமானம் ஆகியவற்றைத் தெரிந்து கொள்ள முடிகிறது.**

9. ஜேம்ஸ் பிரின்செப் சாஞ்சியில் உள்ள கல்வெட்டு ஒன்றில் இருந்த பிராமி எழுத்துகளின் பொருளைக் கண்டுபிடித்த ஆண்டு_______________

A) 1827

B) 1817

**C) 1837**

D) 1847

**விளக்கம்: 1837இல் ஜேம்ஸ் பிரின்செப் சாஞ்சியில் உள்ள கல்வெட்டு ஒன்றில் இருந்த பிராமி எழுத்துகளின் பொருளைக் கண்டுபிடித்த பிறகுதான் மௌரிய காலகட்டத்தை மறுஉருவாக்கம் செய்வது பெரிய அளவிற்குச் சாத்தியப்பட்டது. அதேசமயத்தில், நாட்டின் மற்ற பகுதிகளைச் சேர்ந்த மௌரிய அரசின் கல்வெட்டுக் கட்டளைகள் குறித்த தகவல்களும் கிடைத்தன.**

10. சிந்து வெளி நகரங்களான ஹரப்பா மற்றும் மொஹஞ்சதாரோ கீழ்க்கண்ட எந்த நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

A) 18ம் நூற்றாண்டு

B) 19ம் நூற்றாண்டு

**C) 20ம் நூற்றாண்டு**

D) 21ம் நூற்றாண்டு

**விளக்கம்: இருபதாம் நூற்றாண்டில் தொல்லியல் அகழ்வாய்வுகள் மூலம் சிந்து வெளி நகரங்களான ஹரப்பா, மொஹஞ்சதாரோ ஆகியவற்றைக் கண்டுபிடிக்கும்வரை பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் கண்டுபிடிக்கபட்ட மிகப் பழிமையான தொல்லியல் பொருள் இவையே.**

11. கீழ்க்கண்டக் கூற்றுகளில் பொருந்தாததைக் கண்டறி:

A) ஜீனாகத் பாறைக் கல்வெட்டு குஜராத் மாநிலத்தில் கிர்நார் என்ற இடத்திற்கு அருகில் உள்ளது.

B) இதன் காலம் பொ.ஆ. 130–150 காலத்தைச் சேர்ந்தது.

C) இந்த கல்வெட்டு ருத்ரதாமன் காலத்தில் வெட்டப்பட்டது.

**D) இந்த கல்வெட்டு சமுத்திரகுப்தரின் மாகாண அரசப்பிரதிநிதி (ராஷ்ட்ரியா) புஷ்யகுப்தர் பற்றிக் குறிப்பிடுகிறது.**

**விளக்கம்: இந்த கல்வெட்டு சந்திரகுப்தரின் மாகாண அரசப்பிரதிநிதி (ராஷ்ட்ரியா) புஷ்யகுப்தர் பற்றிக் குறிப்பிடுகிறது. இது பின்வரும் இரண்டு காரணங்களுக்காக முக்கியமானது. 1. மேற்கே வெகு தூரத்திற்கு குஜராத் வரை மௌரியப் பேரரசு பரவி இருந்ததைச் சுட்டிக்காட்டுகிறது. 2. சந்திரகுப்தர் மரணமடைந்து நான்கு நூற்றாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்ட பிறகும்கூட நாட்டின் பல பாகங்களில் அவர் அறியப்பட்டவராகவும், நினைவில் இருப்பவராகவும் இருந்திருக்கிறார்.**

12. முத்ராராட்சசம் என்ற நாடக நூலின் ஆசிரியர்______________

A) அஜாதசத்ரு

B) காளிதாசர்

C) அசோகர்

**D) விசாகதத்தர்**

**விளக்கம்: விசாகதத்தரின் முத்ராராட்சசம் என்ற நாடகம் பொ.ஆ. நான்காம் நூற்றாண்டிற்குச் சிறிது காலத்திற்குப் பிறகு, குப்தர்கள் காலத்தில் எழுதப்பட்டது. இந்த நாடகம் மகத அரியணையில் சந்திரகுப்தர் அமர்ந்ததைப் பற்றியது.**

13. பதினாறு மகாஜனபதங்களில் தொடக்ககாலத்தில் மிகவும் சக்திவாய்ந்ததாக இருந்த மகாஜனபதம்______________

**A) காசி**

B) கோசலம்

C) கிர்னார்

D) மகதம்

**விளக்கம்: 16 மகாஜனபதங்களில் தொடக்ககாலத்தில காசி சக்திவாய்ந்ததாக இருந்தது. எனினும் பின்னர் கோசலம் ஆதிக்கம் செலுத்தியது. மகதம், கோசலம், வஜ்ஜி, அவந்தி ஆகியவற்றிற்கிடையே ஒரு அதிகாரப் போராட்டம் தொடங்கி, இறுதியில் மகதம் ஆதிக்கம் செலுத்தும் மகாஜனபதமாக உருவாகி, முதல் இந்தியப் பேரரசை அமைத்தது.**

14. ஹரியங்கா வம்சத்தில் மகதத்தின் முதல் அரசராக அறியப்படுபவர்________________

A) அஜாதசத்ரு

**B) பிம்பிசாரர்**

C) பிந்துசாரர்

D) அசோகர்

**விளக்கம்: ஹரியங்கா வம்சத்தின் பிம்பிசாரர் மகதத்தின் முதல் அரசராக அறிப்படுகிறார். அவர் திருமண உறவுகள் மற்றும் போர்கள் மூலம் மகதப் பேரரசின் எல்லைகளை விரிவுபடுத்தினார். கோசல அரசர் பிரசேனஜித்திற்குத் தனது சகோதரியை மணம் செய்துதந்ததன் மூலம், காசியை வரதட்சணையாகப் பெற்றார். லிச்சாவி, மாத்ரா இளவரசிகளை அவர் மணந்தார். அவந்தி அரசரோடு நட்பான உறவைப்**

**பேணினார். தனது ஆட்சியில், பல்வேறு மதப் பிரிவுகளையும், அவற்றின் தலைவர்களையும் பிம்பிசாரர் ஆதரித்தார். அவர் புத்தரையும் சந்தித்திருக்கிறார்.**

15. மகதப் பேரரசின் எல்லையை பிம்பிசாரர் கீழ்க்கண்ட எதன் மூலம் விரிவுப்படுத்தினார்.

A) வேளாண்மை

B) போர்கள்

C) திருமண உறவுகள்

**D) B C இரண்டும்**

16. பிம்பிசாரருக்கு அடுத்து மகதத்தின் ஆட்சி பொருப்பை ஏற்றவர்________________

**A) அஜாதசத்ரு**

B) பிம்பிசாரர்

C) பிந்துசாரர்

D) அசோகர்

**விளக்கம்: அஜாதசத்ரு, தந்தை பிம்பிசாரரைக் கொன்றுவிட்டு ஆட்சிக்கு வந்தார். உடனடியாக பிம்பிசாரருக்கு வரதட்சணையாகத் தந்திருந்த காசியை அரசர் பிரசேனஜித் திரும்ப எடுத்துக்கொண்டார்.**

17. வாசகரா என்பவர் கீழ்க்கண்ட யாருடைய அமைச்சராக கருதப்படுகிறார்.

**A) அஜாதசத்ரு**

B) பிம்பிசாரர்

C) பிந்துசாரர்

D) அசோகர்

**விளக்கம்: அஜாதசத்ரு வல்வேறு லிச்சாவி இனக்குழுக்களிடையே பகைமையை வளர்ப்பதற்காகத் தனது அமைச்சர் வாசகராவை அனுப்பினார். அஜாதசத்ரு லிச்சாவியரையும் மல்லர்களையும்வென்றார். அஜாதச்சத்ருவும் புத்தரைச் சந்தித்திருப்பதாக நம்பப்படுகிறது.**

18. அஜாதசத்ரு மறைந்த ஆண்டு_______________

A) பொ.ஆ.மு. 400

B) பொ.ஆ.மு. 421

C) பொ.ஆ.மு. 450

**D) பொ.ஆ.மு. 461**

19. கூற்று 1: ஹரியங்கா வம்சத்தைத் தொடர்ந்து சிசுநாக வம்சம் வந்தது. வாரணாசியின் அரசப்பிரதிநிதி சிசுநாகர் என்பவர் ஹரியங்கா அரசரைக் கொன்று அரியணை ஏறினார்.

கூற்று 2: சிசுநாகர்கள் எழுபதாண்டுக் காலம் ஆட்சி செய்தனர்.

**A) கூற்று 1 சரி 2 தவறு**

B) கூற்று 2 சரி 1 தவறு

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: ஹரியங்கா வம்சத்தைத் தொடர்ந்து சிசுநாக வம்சம் வந்தது. வாரணாசியின் அரசப்பிரதிநிதி சிசுநாகர் என்பவர் ஹரியங்கா அரசரைக் கொன்று அரியணை ஏறினார். சிசுநாகர்கள் ஐம்பதாண்டுக் காலம் ஆட்சி செய்தனர். பிறகு அரியணையை அவர்களிடமிருந்து, மஹாபத்ம நந்தர் கைப்பற்றினார்.**

20. கீழ்க்கண்டக் கூற்றுகளில் நந்தவம்சம் பற்றிய தகவல்களுல் பொருத்தமில்லாததைக் கண்டறி:

1) அஜாதசத்ரு மறைந்து சுமார் நூறு ஆண்டுகளுக்குப் பிறகு பொ.ஆ.மு. 461இல் நந்தர்கள் மகதப் பேரரசின் அரசர்களானார்கள்.

2) முதல் நந்த அரசர் மஹாபத்மா ஆவார்.

3) இவர் சிசுநாக அரசரைக் கொண்று அரியணையைக் கைப்பற்றியதாக நம்பப்படுகிறது.

**A) 1 மட்டும் தவறு**

B) 2 மட்டும் தவறு

C) 2 மட்டும் தவறு

D) அனைத்தும் தவறு

**விளக்கம்: அஜாதசத்ரு மறைந்து சுமார் நூறு ஆண்டுகளுக்குப் பிறகு பொ.ஆ.மு. 362இல் நந்தர்கள் மகதப் பேரரசின் அரசர்களானார்கள்.**

21. கூற்று 1: மகாபத்ம நந்தரைத் தொடர்ந்து அவருடைய எட்டு புதல்வர்கள் ஆட்சி செய்தார்கள்.

கூற்று 2: இவர்கள் அனைவரும் சேர்ந்து நவரத்தினங்கள் என்றழைக்கப்படுகிறார்கள்.

**A) கூற்று 1 சரி 2 தவறு**

B) கூற்று 2 சரி 1 தவறு

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: இவர்கள் அனைவரும் சேர்ந்து நவநந்தர்கள் என்றழைக்கப்படுகிறார்கள்.**

22. முந்நூறு வருடங்களுக்கு முன் அரசர் நந்தர் வெட்டிய நீர்வடிகாலைப் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு______________

A) ஜீனாகத் கல்வெட்டு

**B) ஹதிகும்பா கல்வெட்டு**

C) கிர்னார் கல்வெட்டு

D) அய்கோல் கல்வெட்டு

**விளக்கம்: ஒடிசாவின் புவனேஷ்வருக்கு அருகிலுள்ள உதயகிரியில் காணப்படும் ஹதிகும்பா (யானைக்குகை) கல்வெட்டு முந்நூறு வருடங்களுக்கு முன் அரசர் நந்தர் வெட்டிய நீர்வடிகாலைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இது நந்த அரசு எந்த அளவிற்கு பரவியிருந்தது என்பதைக் காட்டுகிறது.**

23. பாரசீகப் பேரரசர் சைரஸ் இந்தியாவிற்குப் படையெடுத்துவந்த ஆண்டு______________

A) பொ.ஆ.மு. 510

**B) பொ.ஆ.மு. 530**

C) பொ.ஆ.மு. 560

D) பொ.ஆ.மு. 600

**விளக்கம்: பொ.ஆ.மு. 530 வாக்கில், பாரசீகப் பேரரசர் சைரஸ் இந்தியாவிற்குப் படையெடுத்துவந்து கபிஷா என்ற நகரை அழித்தார். கிரேக்க வரலாற்றாளர் ஹெரோடொட்டஸின் கூற்றின்படி, காந்தாரம் ஆக்கிமீனைட் பேரரசின் இருபதாவது மற்றும் செல்வமிக்க சத்ரபியாக இருந்தது.**

24. சிந்து பகுதியில் பாரசீகர்கள் இருந்ததைக் குறிப்பிடும் கல்வெட்டு________________

A) இரண்டாம் டாரியஸின் கல்வெட்டு

**B) முதலாம் டாரியஸின் கல்வெட்டு**

C) ஹதிகும்பா கல்வெட்டு

D) அய்கோல் கல்வெட்டு

**விளக்கம்: முதலாம் டாரியஸின் கல்வெட்டுகள் சிந்து பகுதியில் பாரசீகர்கள் இருந்ததைக் குறிப்பிடுகிறது. "கதாரா, ஹராவதி, மகா" பகுதிகளின் மக்கள் ஆக்கிமீனைட் பேரரசின் குடிமக்கள்" என்றும் கூறுகின்றது.**

25. கீழ்க்கண்டவற்றுள் சரியானதைக் கண்டறி:

1) ஈராக்கில் உள்ள பெர்சிபோலிசில் காணப்படும் முதலாம் டாரியஸின் கல்வெட்டில்தான் "இந்து" என்ற வார்த்தை முதன்முறையாகக் காணப்படுகிறது.

2) பொதுவாக நதியையும், குறிப்பாக சிந்து நதியையும் குறிக்கும் "சிந்து" என்ற சொல் பாரசீகத்தில் "இந்து" வானது.

3) கிரேக்கர்கள் ளுஂனொர என்பதில் உள்ள ள ஐ நீக்கிவிட்டு, ஐனொர என்றார்கள். அது பின்னர் 'ஹிந்து' என்றானது. பின்னர் அதிலிருந்து 'இந்தியா' வந்தது.

A) 1 மட்டும் சரி

**B) 2 3 மட்டும் சரி**

C) 3 மட்டும் சரி

D) அனைத்தும சரி

**விளக்கம்: ஈரானில் உள்ள பெர்சிபோலிசில் காணப்படும் முதலாம் டாரியஸின் கல்வெட்டில்தான் "இந்து" என்ற வார்த்தை முதன்முறையாகக் காணப்படுகிறது.**

26. தட்சசீலம் இன்றைய______________இல் உள்ளது.

A) ஆப்கானிஸ்தான்

B) சீனா

C) பாரசீகம்

**D) பாகிஸ்தான்**

**விளக்கம்: தட்சசீலம் இன்றைய பாகிஸ்தானில் உள்ளது. பொ.ஆ.மு. ஐந்தாம் நான்காம் நூற்றாண்டுகளுக்கிடையே அது பாரசீகத்தின் ஆக்கிமீனைட் பேரரசின் பகுதியாக இருந்தது. கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையில் உள்ள வணிகப் பெருவழியில், அதன் அமைவிடம் இருந்ததால் சிறப்பான முக்கியத்துவம் பெற்றிருந்தது.**

27. 1940 களில் சர் ஜான் மார்சல் நடத்திய அகழ்வாய்வுகளின் போது கீழ்க்கண்ட எந்த நகரம் கண்டுபிடிக்கப்பட்டது.

A) காளிபங்கன்

B) லோத்தல்

**C) தட்சசீலம்**

D) எல்லோரா

**விளக்கம்: 1940 களில் சர் ஜான் மார்சல் நடத்திய அகழ்வாய்வுகளின் போது இந்த நகரம் கண்டுபிடிக்கப்பட்டது. "எந்த ஒரு நாகரிகத்திலும் இல்லாத உயர்ந்த அறிவார்ந்த சாதனைகளைப் படைத்ததாக" தட்சசீலம் கருதப்படுகிறது. பாணினி தனது புகழ்பெற்ற படைப்பான அஷ்டத்யாயி என்ற இலக்கிய நூலை இங்குதான் எழுதியதாகத் தெரிகிறது.**

28. பாணினி தனது புதழ்பெற்ற படைப்பான அஷ்டத்யாயி என்ற இலக்கிய நூலை கீழ்க்கண்ட எந்த நகரத்தில் இருந்து எழுதியதாக நம்பப்படுகிறது.

A) காளிபங்கன்

B) லோத்தல்

C) பட்டடக்கல்

**D) தட்சசீலம்**

**விளக்கம்: 1940 களில் சர் ஜான் மார்சல் நடத்திய அகழ்வாய்வுகளின் போது இந்த நகரம் கண்டுபிடிக்கப்பட்டது. "எந்த ஒரு நாகரிகத்திலும் இல்லாத உயர்ந்த அறிவார்ந்த சாதனைகளைப் படைத்ததாக" தட்சசீலம் கருதப்படுகிறது. பாணினி தனது புகழ்பெற்ற படைப்பான அஷ்டத்யாயி என்ற இலக்கிய நூலை இங்குதான் எழுதியதாகத் தெரிகிறது.**

29. அராமிக் போலவே______________ம் வலதுபுறமிருந்து இடதுபுறமாக எழுதப்படும் எழுத்துமுறையாகும்.

A) திராவிடம்

B) அரபு

**C) கரோஷ்டி**

D) உருது

**விளக்கம்: அராமிக் போலவே கரோஷ்டியும் வலதுபுறமிருந்து இடதுபுறமாக எழுதப்படும் எழுத்துமுறையாகும். பாரசீகத்தில் சிக்லோய் என்ற வெள்ளி நாணயம் இப்பகுதியிலிருந்து மாதிரியாக எடுத்துக் கொள்ளப்பட்டதே ஆகும்.**

30. கூற்று 1: இந்தியாவின் மிகப் பழைமையான நாணயங்கள் மகாஜனபத அரசின் காலத்தவையாகும்.

கூற்று 2: நாணயத்திற்கான இந்தியச் சொல்லான "கார்சா" அரபு மொழியிலிருந்து வந்ததாகும். மேலும் இந்த நாணயங்கள் அரபு நாணயங்களைப் பார்த்து உருவாக்கப்பட்டிருக்கலாம்.

A) கூற்று 2 சரி 1 தவறு

**B) கூற்று 1 சரி 2 தவறு**

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: நாணயத்திற்கான இந்தியச் சொல்லான "கார்சா" பாரசீக மொழியிலிருந்து வந்ததாகும். மேலும் இந்த நாணயங்கள் பாரசீக நாணயங்களைப் பார்த்து உருவாக்கப்பட்டிருக்கலாம்.**

31. கூற்று 1: அசோகருடைய கல்வெட்டுக கட்டளைகள் ஆக்கிமீனைட் அரசர் டாரியஸின் கல்வெட்டுக் கட்டளைகளைப் பார்த்து உருவாக்கப்பட்டிருக்கலாம்.

கூற்று 2: அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் ஈரானியச் சொல்லான 'டிபி'க்குப் பதிலாக 'லிபி' என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றன.

A) கூற்று 2 சரி 1 தவறு

B) கூற்று 1 சரி 2 தவறு

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

32. சமஸ்கிருதத்திற்கும் பாரசீகத்திற்கும் உள்ள தொடர்பு பற்றிய கூற்றுகளில் சரியானதைக் கண்டறி:

1) யஜீர் வேதத்திற்கும் ஜென்ட் அவஸ்தாவிற்கும் பல மொழியியல் ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

2) ஆரியர்கள் என்ற சொல்லைப் பண்டைக்கால பாரசீகர்களும் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

3) இந்திய மொழி–பண்பாட்டு ஆய்வாளர் தாமஸ் பரோவின் கூற்றின்படி, உச்சரிப்பு மட்டும் காலப்போக்கில் மாறியிருக்கலாம்.

A) 1 மட்டும் சரி

**B) 2 3 மட்டும் சரி**

C) 3 மட்டும் சரி

D) அனைத்தும சரி

**விளக்கம்: ரிக் வேதத்திற்கும் ஜென்ட் அவஸ்தாவிற்கும் பல மொழியியல் ஒற்றுமைகள் காணப்படுகின்றன.**

33. ஒரு ஹிட்டைட் அரசனுக்கும், மிட்டன்னி அரசனுக்கும் இடையிலான ஒப்பந்தத்தைப் பற்றிக் கூறும் கல்வெட்டு_____________

**A) போகஸ் கோய் கல்வெட்டு**

B) கிர்னார் கல்வெட்டு

C) ஜீனாகத் கல்வெட்டு

D) அய்கோல் கல்வெட்டு

**விளக்கம்: பொ.ஆ.மு. 1380ஐச் சேர்ந்த போகஸ் கோய் (வடகிழக்கு சிரியா) கல்வெட்டு ஒன்று ஒரு ஹிட்டைட் அரசனுக்கும், மிட்டன்னி அரசனுக்கும் இடையிலான ஒப்பந்தத்தைப் பற்றிக் கூறுகிறது. அது சில ரிக்வேத கடவுளர்களான (அஸ்வினி) ஆகிய பெயர்களைக் குறிப்பிடுகிறது.**

34. ______________என்பவரின் ஆட்சிக்காலத்தில் அலெக்சாண்டர் வட–மேற்கு இந்தியா மீது படையெடுத்தார்.

A) அஜாதசத்ரு

B) பிம்பிசாரர்

C) பிந்துசாரர்

**D) தனநந்தர்**

**விளக்கம்: தனநந்தர் ஆட்சிக்காலத்தில் அலெக்சாண்டர் வட–மேற்கு இந்தியா மீது (பொ.ஆ.மு. 327–325) படையெடுத்தார். பலவகைகளில் அலெக்சாண்டரின் படையெடுப்பு இந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும்.**

35. பாரசீகர்களைத் தோற்கடித்துவிட்டு, அலெக்சாண்டர் இந்தியத் துணைகண்டத்திற்குள் நுழைந்த ஆண்டு_______________

**A) பொ.ஆ.மு. 326**

B) பொ.ஆ.மு. 300

C) பொ.ஆ.மு. 356

D) பொ.ஆ.மு. 376

**விளக்கம்: பொ.ஆ.மு. 326இல் பாரசீகர்களைத் தோற்கடித்துவிட்டு, அலெக்சாண்டர் இந்தியத் துணைகண்டத்திற்குள் நுழைந்தபோது தட்சசீலத்தின் அரசரான அம்பி அவரிடம் சரணடைந்து, அவரது மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டார்.**

36. கூற்று 1: அலெக்சாண்டரின் வரலாற்று சிறப்புமிக்க போர் ஜீலம் நதிக்கரைக்கும், பியாஸ் நதிக்கரைக்கும் இடைப்பட்ட பகுதியை ஆட்சி செய்த போரஸீடன் நடந்தது.

கூற்று 2: இவ்விரு இராணுவங்களும் ஹைடாஸ்பெஸ் போரில் சந்தித்தன. இதில் போரஸ் சிறைப்பிடிக்கப்பட்டார்.

A) கூற்று 2 சரி 1 தவறு

B) கூற்று 1 சரி 2 தவறு

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

37. அலெக்சாண்டர் மறைந்த இடம்____________

A) மகதம்

B) கோசலம்

C) அவந்தி

**D) பாபிலோன்**

38. கிரேக்க வரலாற்றாளர்கள் சந்திரகுப்தரை______________என்று குறிப்பிடுகின்றனர்.

A) சண்ட்ரகோட்டஸ்

B) சண்ட்ரகோப்டஸ்

**C) A B இரண்டும்**

D) மேற்கண்ட எதுவுமில்லை

**விளக்கம்: கிரேக்க வரலாற்றாளர்கள் சந்திரகுப்தரரை சண்ட்ரகோட்டஸ் என்றும் சண்ட்ரகோப்டஸ் என்றும் குறிப்பிடுகின்றனர். இவை சந்திரகுப்தர் என்ற சொல்லின் திரிபுகள், அலெக்சாண்டரிடமிருந்து பெற்ற உந்துதலால் சந்திரகுப்தர் பல ஆண்டுகள் கழித்து நந்தர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து அவர்களை விரட்டினார்.**

39. சந்திரகுப்த மௌரியரால் மௌரியப் பேரரசு உருவாக்கப்பட்ட காலம்_______________

**A) பொ.ஆ.மு. 321**

B) பொ.ஆ.மு. 320

C) பொ.ஆ.மு. 326

D) பொ.ஆ.மு. 328

40. அலெக்சாண்டரின் படைத்தளபதி_______________

A) அஜாதசத்ரு

B) ராஜகுரு

**C) செலியுகஸ்**

D) கனிஷ்கர்

41. சந்ததிரகுப்தருக்கும் செல்யுகஸீற்கும் நடைபெற்ற உடன்படிக்கையின் படி சந்திரகுப்தர் செல்யுகஸீகருக்கு_______________யை வழங்கினார்.

A) 100 போர்யானைகள்

B) 300 போர்யானைகள்

**C) 500 போர்யானைகள்**

D) 800 போர்யானைகள்

**விளக்கம்: சந்திரகுப்த மௌரிருக்கும் செல்யுகஸருக்கும் நடைபெற்ற உடன்படிக்கையால் சந்திரகுப்தர் செல்யுகஸிற்கு 500 போர் யானைகளை வழங்கினார். செல்யுகஸ் தனது தூதரைச் சந்திரகுப்தரின் அரசவைக்கு அனுப்பினார். அந்த தூதர்தான் மெகஸ்தனிஸ்.**

42. சந்திரகுப்தரின் அரசவைக்கு செல்யுகஸீனால் அனுப்பப்பட்டத் தூதுவர்_____________

**A) மெகஸ்தனிஸ்**

B) ஜேம்ஸ் பிரின்செப்

C) சந்திரமௌலி

D) மேற்கண்ட எவருமில்லை

43. மெகஸ்தனிஸ் எழுதிய நூல்______________

A) முத்ராராட்சசம்

B) தேவிச்சந்திரகுப்தம்

C) இரத்னாவளி

**D) இன்டிகா**

**விளக்கம்: சந்திரகுப்தர் குறித்து நாம் அறியவரும் பெரும்பாலான தகவல்கள், மெகஸ்தனிஸ் எழுதிய 'இன்டிகா' என்ற நூலில் உள்ளவையே. இந்த நூலின் மூலம் கிடைக்கவில்லை. ஆனால் பல கிரேக்க வரலாற்றாளர்கள் சந்திரகுப்தரின் அரசு, நிர்வாகம் ஆகியவை குறித்து மெகஸ்தனிஸ் குறிப்பிட்டுள்ள பகுதிகளை மேற்கோள்காட்டி எழுதியிருக்கிறார்கள்.**

44. அரசியல் தந்திரங்களுக்குப் பெயர் போன சாணக்கியரின் ஆலோசனைகளின் படி நிர்வாகத்தை மேற்கொண்ட பேரரசர்_____________________

A) தனநந்தர்

**B) சந்திரகுப்த மௌரியர்**

C) விஷ்ணுகுப்தர்

D) மேற்கண்ட அனைவரும்

**விளக்கம்: அரசியல் தந்திரங்களுக்குப் பெயர் போன சாயக்கியரின் ஆலோசனைகள் நிர்வாகத்தை நடத்துவதற்கு உதவின. சந்திரகுப்தரின் சமகால பௌத்த, சமண நூல்கள் சாணக்கியர் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.**

45. சாணக்கியர் பற்றியக் கருத்துகளில் தவறானதைக் கண்டறி:

A) விஷ்ணுகுப்தர் என்று அழைக்கப்பட்ட சாணக்கியர் அல்லது கௌடில்யர் ஒரு பிராமணர்.

B) நந்தர்களின் கடும் எதிரி. நந்தர்களை வீழ்த்துவதற்கான திட்டங்களை இவர்தான் வகுத்தார் என்றும் கூறப்படுகிறது.

C) அரசியல் நிர்வாகம் குறித்த புகழ்பெற்ற நூலான அர்த்தசாஸ்திரத்தை சாணக்கியர் எழுதினார் என்பது மரபு.

**D) மகத நாட்டிற்கு வரவிருந்த படையெடுப்பைத் தடுப்பதற்கு இவரது சூழ்ச்சி மிக்க தந்திரங்களும், அற்புதமான யுக்தியும் தேவிச்சந்திரகுப்தம் எனும் நாடகத்தின் கருப்பொருளாகும்.**

**விளக்கம்: மகத நாட்டிற்கு வரவிருந்த படையெடுப்பைத் தடுப்பதற்கு இவரது சூழ்ச்சி மிக்க தந்திரங்களும், அற்புதமான யுக்தியும் முத்ராராட்ச்சசம் எனும் நாடகத்தின் கருப்பொருளாகும்.**

46. சந்திரகுப்தருக்கு பிறகு ஆட்சிப் பொருப்பேற்றவர்________________

**A) பிந்துசாரர்**

B) பிம்பிசாரர்

C) அஜாதசத்ரு

D) கனிஷ்கர்

**விளக்கம்: சந்திரகுப்தரின் புதல்வர் பிந்துசாரர் பொ.ஆ.மு. 297இல் அமைதியான, இயல்பான ஆட்சி மாற்றம் மூலம் அவருக்குப் பின் ஆட்சியில் அமர்ந்தார். சந்திரகுப்தருக்கு என்ன ஆனது என்று தெரியவில்லை. சில சமண நூல்கள் சொல்வது போல, அவர் இவ்வுலக வாழ்வைத் துறந்து, சமணத் துறவியாகி இருக்கலாம்.**

47. சந்திரகுப்தர் கீழ்க்கண்ட எந்த இடத்தில் சமணத் துறிவயாக வாழ்ந்ததாக சமண நூல்கள் குறிப்பிடுகிறது.

A) தௌலி

B) காந்தஷார்

**C) சந்திரகிரி**

D) சாரநாத்

**விளக்கம்: சமண கரைகளின்படி, சந்திரகுப்தர், கர்நாடகாவின் சிரவணபெலகொலாவிற்கு அருகிலுள்ள சந்திரகிரியில் துறவியாக வாழ்ந்ததாகத் தெரிகிறது. பிந்துசாரர் நல்ல திறமையான அரசர். மேற்கு ஆசியாவின் கிரேக்க அரசுகளுடன் நல்லுறவு பேணும் தனது தந்தையின் வழியைத் தொடர்ந்தார். இவருக்கு சாணக்கியரும் மற்ற அமைச்சர்களும் ஆலோசனை வழங்கினர்.**

48. பிந்துசாரர் மௌரிய வம்சத்தில் ஆட்சி செய்த ஆண்டு________________

A) 15 ஆண்டுகள்

B) 20 ஆண்டுகள்

**C) 25 ஆண்டுகள்**

D) 30 ஆண்டுகள்

**விளக்கம்: பிந்துசாரர் 25 ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவர் பொ.ஆ.மு. 272இல் இறந்திருக்க வேண்டும். அசோகர் அவர் தேர்ந்தெடுத்த வாரிசு அல்ல. நான்காண்டுகளுக்குப் பிறகே, பொ.ஆ.மு. 268இல் ஆட்சிக்கு வந்தார் என்பதன் மூலம் அரசுரிமைக்காப் புதல்வர்களுக்கிடையில் போட்டி நடந்திருக்கிறது என்பதை உய்த்துணர முடிகிறது.**

49. அசோகர் பற்றிய கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறானதைக் கண்டறி:

1) அசோகர் தட்;சசீலத்தில் அரசப் பிரதிநிதியாக இரந்தார்.

2) அங்கு உள்ளுர் அதிகாரிகளுக்கு எதிராக மக்கள் செய்த கிளர்ச்சியை அடக்கினார். பின்னர் அவந்தியின் தலைநகரும், முக்கிய நகரமும், வணிக மையமுமான உஜ்ஜயினியில் அரசின் பிரதிநிதியாக இருந்தார்.

3) பேரரசராக அவர் அற்புதமான நினைவுச் சின்னங்களைக் கட்டியவர் என்ற புகழ் பெற்றவர். அவை மகதத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் வெளிப்பட்டுள்ளன.

A) 1 மட்டும் தவறு

B) 2 மட்டும் தவறு

**C) 3 மட்டும் தவறு**

D) அனைத்தும் தவறு

**விளக்கம்: பேரரசராக அவர் அற்புதமான நினைவுச் சின்னங்களைக் கட்டியவர் என்ற புகழ் பெற்றவர். அவை பாடலிப்புத்திரத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் வெளிப்பட்டுள்ளன.**

50. அசோகரின் எத்தனையாவது ஆண்டு ஆட்சிகாலத்தில் கலிங்கப்போர் நடைபெற்றது.

A) ஐந்தாவது

B) ஆறாவது

C) ஏழாவது

**D) எட்டாவது**

**விளக்கம்: அசோகரது ஆட்சிக்காலத்தின் முக்கியமான நிகழ்வு அவரது ஆட்சியின் எட்டாவது ஆண்டில் நடந்த கலிங்கத்தின் (இன்றைய ஒடிசா) மீதான அவரது படையெடுப்பு ஆகும். இது ஒன்றுதான் மௌரியர்கள் அதிகார்ப்பூர்வமாக பதிவுசெய்த படையெடுப்ப ஆகும்.**

51. கீழ்க்கண்டக் கூற்றுகளில் சரியானதைக் கண்டறி:

1) கலிங்கப் போரினால் ஏற்பட்ட அழிவினை கண்டு அசோகர் மிகவும் வருந்தினார்.

2) போரினால் ஏற்பட்ட துன்பங்களால் நெகிழ்ந்த அவர் மனிதாபிமான மதிப்பீடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பவராக மாறி, பௌத்தராக மதம் மாறினார்.

3) அவர் புதிதாய் அறிந்த மதிப்பீடுகளும் நம்பிக்கைகளும் அவரது கல்வெட்டுக் கட்டளைகளில் வரிசையாகப் பதிவு செய்யப்பட்டன.

A) 1 2 மட்டும் சரி

B) 2 3 மட்டும் சரி

C) 1 3 மட்டும் சரி

**D) அனைத்தும் சரி**

52. தம்மம் என்பது_____________மொழியில் தர்மம் என்று இடம்பெற்றுள்ளது.

A) பாலி

B) அரபு

C) ரோமானிய

**D) சமஸ்கிருதம்**

53. கலிங்க கல்வெட்டுக் கட்டளைகள் எத்தனை பாறைகளில் பொறிக்கப்பட்டுள்ளது.

A) 10

B) 12

**C) 14**

D) 18

**விளக்கம்: 14 முக்கியமான பாறைகளில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக் கட்டளைகள் கலிங்க கல்வெட்டுக் கட்டளைகள் என்று அழைக்கப்படும் 2 கல்வெட்டுக் கட்டளைகள், 7 தூண் கல்வெட்டுக் கட்டளைகள், சில சிறு பாறைகளில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக் கட்டளைகள், மிகச் சில சிறு தூண்களில் பதியப்பட்ட கல்வெட்டுக் கட்டளைகள் என்று மொத்தம் 33 கல்வெட்டுக் கட்டளைகள் இதுவரை கிடைத்துள்ளது.**

54. பொருத்துக:

A) லும்பினி – 1. பாகிஸ்தான்

B) காந்தஹார் – 2. நேபாளம்

C) தௌலி – 3. ஆப்கானிஸ்தான்

D) ஷாபஸ்கார்ஹி – 4. ஒடிசா

A) 1 2 3 4

**B) 2 3 4 1**

C) 1 2 4 3

D) 4 3 2 1

**விளக்கம்:**

**A) லும்பினி – 1. நேபாளம்**

**B) காந்தஹார் – 2. ஆப்கானிஸ்தான்**

**C) தௌலி – 3. ஒடிசா**

**D) ஷாபஸ்கார்ஹி – 4. பாகிஸ்தான்**

55. அசோகரின் பேரரசின் எல்லைக்கு வெளியேயான நிலப்பரப்புகளைக் கூறும் கல்வெட்டு______________

**A) இரண்டாவது கல்வெட்டு**

B) ஆறாவது கல்வெட்டு

C) ஏழாவது கல்வெட்டு

D) பனிரெண்டாவது கல்வெட்டு

**விளக்கம்: இந்த மௌரியப் பேரரசின் கல்வெட்டுக் கட்டளைகள் புவியியல் நோக்கில் பரவியுள்ள விதம், அசோகர் ஆட்சி செய்த ஒரு பெரிய பேரரசின் பரப்பளைவைக் காட்டுகிறது. அவரது இரண்டாவது அரசாணை அரவது பேரரசின் எல்லைக்கு வெளியேயான நிலப்புரப்புகளைக் கூறுகிறது.**

56. அமைதி, நேர்மை, நீதி ஆகியவற்றின் மீது அசோகருக்கு இருந்த நம்பிக்கை, மற்றும் மக்களது நல்வாழ்வின் மீது அவருக்கிருந்த அக்கறை பற்றி கூறும் அரசாணை______________

A) ஆறாவது கல்வெட்டு

B) ஏழாவது கல்வெட்டு

C) பனிரெண்டாவது கல்வெட்டு

**D) இரண்டாவது கல்வெட்டு**

**விளக்கம்: அசோகரின் இரண்டாவது அரசாணையானது அசோகருக்கு மக்களது நல்வாழ்வின் மீது அவருக்கிருந்த அக்கறை பற்றியும், அமைதி, நேர்மை, நீதி ஆகியவற்றின் மீது அவருக்கு இருந்த நம்பிக்கை பற்றியும் கூறுகிறது.**

57. அசோகரின் தலைமையில் மூன்றாவது பௌத்த சங்கம் நடைபெற்ற இடம்_______________

A) ராஜகிருகம்

B) வைசாலி

**C) பாடலிபுத்திரம்**

D) காஷ்மீர்

**விளக்கம்: அசோகர் ஆட்சியில் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க நிகழ்வுகளில் ஒன்று, பொ.ஆ.மு. 250இல் தலைநகரமான பாடலிபுத்திரத்தில் மூன்றாவது பௌத்த சங்கத்தைக் கூட்டியது ஆகும். அசோகரது ஆழமான பௌத்தமத ஈடுபாட்டால் பௌத்தமதத்திற்கு அரச ஆதரவு கிட்டியது. பௌத்தமதத்திற்கு அரச ஆதரவு கிட்டியது. பௌத்தத்தை மற்ற பகுதிகளுக்கும் பரப்புவும், மக்களை பௌத்த மதத்திற்கு மாற்ற பிரச்சாரகர்களை அனுப்பவும்; வேண்டும் என்பது இச்சங்கத்தின் முக்கியமான முடிவாகும்.**

58. அசோகர் இலங்கையில் பௌத்த மதத்தை பரப்ப கீழ்க்கண்ட யாரை அனுப்பினார்.

A) மகேந்திரன்

B) ராகுலன்

C) சங்கமித்திரை

**D) A C இரண்டும்**

**விளக்கம்: அசோகர் தனது குழந்தைகளான மகேந்திரன், சங்கமித்திரை ஆகியோரை மதத்தைப் பரப்ப இலங்கைக்கு அனுப்பினார் என்பர். புத்தர் அமர்ந்த போதிமரத்தின் ஒரு கிளையை அவர்கள் இலங்கைக்குக் கொண்டு சென்றதாகவும் நம்பப்படுகிறது.**

59. கௌடில்யர் எழுதிய அர்த்தசாஸ்திரத்தின்படி தலைமை அமைச்சர், புரோகிதர், ராணுவ தளபதி ஆகியோரின் ஊதியம்_____________

A) 500

B) 28,000

C) 38,000

**D) 48,000**

**விளக்கம்: அர்த்தசாஸ்திரத்தின்படி தலைமை அமைச்சர், புரோகிதர், ராணுவ தளபதி ஆகியோருக்கு ஊதியம் 48,000 ஆகும்.**

60. கௌடில்யர் எழுதிய அர்த்தசாஸ்திரத்தின்படி போர்வீரர்களின் ஊதியம்_____________

A) 28,000

B) 38,000

C) 48,000

**D) 500**

**விளக்கம்: விளக்கம்: அர்த்தசாஸ்திரத்தின்படி தலைமை அமைச்சர், புரோகிதர், ராணுவ தளபதி ஆகியோருக்கு ஊதியம் 48,000 ஆகும். போர்வீரர்களுக்கு ஊதியம் 500 ஆகும். இந்தத் தொகையைக் காலாட்படை, குதிரைப்படை, எண்ணிக்கையைக் கொண்டு கணக்கிட்டால் ராணுவத்தையும் நிர்வாகப் பிரிவு ஊழியர்களையும் நிர்வகிக்கத் தேவையான பெருமளவு நிதியாதாரம் குறித்து ஒருவாறு புரிந்து கொள்ள முடியும்.**

61. நாட்டின் நிர்வாகத்தின் தலைவர்______________

A) அமைச்சர்

**B) அரசர்**

C) கிராமத்தின் தலைவர்

D) மேற்கண்ட எவருமில்லை

**விளக்கம்: நாட்டின் நிர்வாகத்தின் தலைவர் அரசர் ஆவார். அவருக்கு அமைச்சரவை, ஒரு மதகுரு, மஹாமாத்திரியர்கள் என்றழைக்கப்பட்ட செயலாளர்கள் ஆகியோர் உதவினர். தலைநகர் பாடலிபுத்திரம் நேரடியாக நிரவகிக்கப்பட்டது. எஞ்;சிய மௌரிய அரசுப் பகுதிகள் ஆந்திரப்பிரதேசத்தின் கர்னூலுக்கு அருகிலுள்ள சுவர்ணகிரி உஜ்ஜையினி, வட மேற்கில் தட்சசீலம். தென்கிழக்கில் ஒடிசாவின் தோசாலி என்று நான்கு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு, அரசரின் பிரதிநிதிகளால் ஆளப்பட்டன.**

62. கூற்று 1: மௌரியப் பேரரசில் வரி வசூல் சமஹர்த்தா என்பவரின் பொறுப்பாக இருந்தது. இவர்தான் செலவுகளுக்கும் பொறுப்பு என்பதால், ஒரு விதத்தில் இவர் நிதியமைச்சர் போல் இருந்தார்.

கூற்று 2: இவர் அனைத்து மாகாணங்கள், நகரங்கள், சுரங்கங்கள், காடுகள், வணிகப் பெருவழிகள், வருவாய் வரக்கூடிய மற்ற வழிகள் என அனைத்தையும் மேற்பார்வை செய்ய வேண்டியிருந்தது.

A) கூற்று 2 சரி 1 தவறு

B) கூற்று 1 சரி 2 தவறு

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

63. பொருத்துக:

A) ஸ்தானிகர் – 1. கிராம நிர்வாகம்

B) கோபா – 2. நகர நிர்வாகம்

C) நகரகா – 3. ஐந்து முதல் பத்து கிராமங்கள்

D) கிராமணி – 4. மாவட்ட நிர்வாகம்

A) 1 2 3 4

B) 2 3 4 1

C) 1 2 4 3

**D) 4 3 2 1**

**விளக்கம்:**

**A) ஸ்தானிகர் – 1. மாவட்ட நிர்வாகம்**

**B) கோபா – 2. ஐந்து முதல் பத்து கிராமங்கள்**

**C) நகரகா – 3. நகர நிர்வாகம்**

**D) கிராமணி – 4. கிராம நிர்வாகம்**

64. மௌரியப் பேரரசின் போது பொருளாதாரத்திற்கு மிக முக்கிய பங்களிப்புத் துறையாக விளங்கியது______________

A) வணிகம்

B) வட்டிக்கு கடன் தருதல்

**C) வேளாண்மை**

D) நெசவு

**விளக்கம்: முந்தைய பல நூற்றாண்டுகள் போலவே அப்போதும் வேளாண்மைதான் தேசியப் பொருளாதாரத்திற்கு மிக முக்கியமான பங்களிப்பைத் தரும் துறையாக இருந்தது. பொதுவாக அரசருக்கு உற்பத்தியில் ஆறில் ஒரு பங்கு உரியது. ஆனால் நடைமுறை அதைவிட மிகவும் அதிகமாக இருந்தது. பொதுவாக உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கு வரியாகப் பெறப்பட்டிருக்கலாம்.**

65. மௌரிய காலத்தில் திருமணம், வாரிசுரிமை உள்ளிட்ட குடிமை உரிமைகள் தொடர்பான வழக்குகளை விசாரித்த நீதிமன்றங்கள்_____________எனப்பட்டன.

**A) தர்மஸ்தியா**

B) திவானி இ ரசாலத்

C) திவானி இ அஸ்ரத்

D) கந்தகோசந்தனா

**விளக்கம்: தர்மஸ்தியா நீதிமன்றங்கள் பெரும்பாலும் திருமணம், வாரிசுரிமை உள்ளிட்ட குடிமை உரிமைகள் தொடர்பான வழக்குகளை விசாரித்தன. இந்த நீதிமன்றங்களில் மதச் சட்டங்களை நன்கு அறிந்த மூன்று நீதிபதிகளும் மூன்று அமாத்தியாக்களும் இருந்தார்கள்**

66. மௌரிய காலத்தில் சமூக விரோதிகளையும், பல்வேறு விதமான குற்றங்களையும் அகற்றுவதற்காக இருந்த நீதிமன்றம்_________________என்றழைக்கப்படுகிறது.

A) தர்மஸ்தியா

B) திவானி இ ரசாலத்

C) திவானி இ அஸ்ரத்

**D) கந்தகோசந்தனா**

**விளக்கம்: தர்மஸ்தியா நீதிமன்றங்கள் பெரும்பாலும் திருமணம், வாரிசுரிமை உள்ளிட்ட குடிமை உரிமைகள் தொடர்பான வழக்குகளை விசாரித்தன. இந்த நீதிமன்றங்களில் மதச் சட்டங்களை நன்கு அறிந்த மூன்று நீதிபதிகளும் மூன்று அமாத்தியாக்களும் இருந்தார்கள். மற்றொரு நீதிமன்றம் கந்தகோசந்தனா என்றழைக்கப்பட்டது. இதிலும் மூன்று நீதிபதிகளும் மூன்று செயலாளர்களும் இருந்தார்கள். இந்த நீதிமன்றங்களின் முக்கியப் பணி சமூக விரோதிகளையும், பல்வேறு விதமான குற்றங்களையும் அகற்றுததலாகும். இது பெரும்பாலும் இன்றைய நவீன காவல்துறை போல இயங்கியது.**

67. பொருத்துக:

A) யுக்தர்கள் – 1. கீழ்நிலை அதிகாரிகள்

B) கந்தகோசந்தனா – 2. முள்ளை எடுத்தல்

C) ராஜீக்கர்கள் – 3. கிராம நிர்வாகிகள்

D) பிரதேசிகர்கள் – 4. மாவட்டத் தலைவர்கள்

**A) 1 2 3 4**

B) 2 3 4 1

C) 1 2 4 3

D) 4 3 2 1

68. எல்லா மக்களும் தமது குழந்தைகள் என்றும் தன் சொந்த குழந்தைகளுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்பவேனோ, அதையேதான் அனைத்து மக்களுக்கும் செய்ய வேண்டும் என்று கூறும் அசோகரின் கல்வெட்டு எண்_________________

A) பாறைக் கல்வெட்டு கட்டளை எண் – 3

**B) பாறைக் கல்வெட்டு கட்டளை எண் – 1**

C) பாறைக் கல்வெட்டு கட்டளை எண் – 6

D) பாறைக் கல்வெட்டு கட்டளை எண் – 7

**விளக்கம்: அசோகரின் பாறை கல்வெட்டு கட்டளை எண் – 1 ன் படி. எல்லா மக்களும் தமது குழந்தைகள் என்றும் தன் சொந்த குழந்தைகளுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்பவேனோ, அதையேதான்**

**அனைத்து மக்களுக்கும் செய்ய வேண்டும். மேலும் இந்த உலகிலும், அடுத்த உலகிலும் நலமும் மகிழ்வும் பெற வேண்டும் என்ற பொறுப்புணர்வுடன் செயல்பட, அதிகாரிகளுக்கும், நகர நீதிபதிகளுக்கும் கட்டளையிட்டுள்ளார்.**

69. ஒரு திறமையான அரசர் தன் நாட்டில் என்ற நடக்கிறது என்பது பற்றி முழுமையாக அறிந்திருக்க வேண்டும் என்பதை கூறும் அசோகரின் கல்வெட்டு எண்________________

A) பாறைக் கல்வெட்டு கட்டளை எண் – 3

B) பாறைக் கல்வெட்டு கட்டளை எண் – 1

**C) பாறைக் கல்வெட்டு கட்டளை எண் – 6**

D) பாறைக் கல்வெட்டு கட்டளை எண் – 7

**விளக்கம்: ஒரு திறமையான அரசர் தன் நாட்டில் என்ற நடக்கிறது என்பது பற்றி முழுமையாக அறிந்திருக்க வேண்டும் என்பதை அசோகர் உணர்ந்திருந்தார். தான் எங்கே இருந்தாலும் தமக்கு முறையான தகவலும் ஆலோசனையும் தரப்பட் வேண்டும். என்றார் (முக்கிய பாறைக் கல்வெட்டு கட்டளை எண் – 6)**

70. அனைத்து மதங்களும் அமைதி நிலவ ஒத்துழைக்க வேண்டும் என்றும் எல்லா மதத்துறவிகளுக்கும் மரியாதை தரப்படவேண்டும் என்றும் அசோகரின் கூறும் கல்வெட்டு எண்________________

A) பாறைக் கல்வெட்டு கட்டளை எண் – 12

B) பாறைக் கல்வெட்டு கட்டளை எண் – 7

C) பாறைக் கல்வெட்டு கட்டளை எண் – 1

**D) A B இரண்டும் சரி**

71. அசோகரின் கல்வெட்டு கட்டளை எண் – 2 ன் படி கீழ்க்கண்டக் கூற்றுகளில் சரியானதைக் கண்டறி:

1) மருத்துவ வசரி தருவது அரசாங்கத்தின் பணிகளுல் ஒன்றாக இருக்க வேண்டும்.

2) பேரரசர் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் மருத்துவம் பார்க்க மருத்துவமனைகளைத் திறக்க உத்தரவிட்டார்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

72. கீழ்க்கண்டக் கூற்றுகளில் பொருத்தமில்லாததைக் கண்டறி:

A) மௌரியப் பேரரசுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக வேளாண்மை விளங்கியது.

B) மண்ணின் வளத்தால் ஆண்டுக்கு இரண்டு போகம் விளைந்ததைக் கிரேக்கர்கள் வியப்போடு பதிவு செய்திருக்கிறார்கள்.

**C) உணவு தானியங்களுடன், சணல், தேயிலை போன்ற வணிகப்பயிர்களையும் விளைவித்தனர்.**

D) மௌரிய கால வேளாண்மைக் குறித்த தகவல்களை மெகஸ்தனிஸ் தனது நூல்களில் குறிப்பிட்டுள்ளார்.

**விளக்கம்: உணவு தானியங்களுடன், கரும்பு, பருத்தி போன்ற வணிகப்பயிர்களையும் விளைவித்தனர் என்பதைப் பதிவு செய்யும் மெகஸ்தனிஸ், அவற்றை முறையே 'தேனை உற்பத்தி செய்யும் மூங்கில்' என்றும், 'கம்பளி வளரும் செடி' என்றும் குறிப்பிடுகிறார்.**

73. கீழ்க்கண்டவற்றில் சரியான இணையற்றதைக் கண்டறி:

A) கலிங்கம் – ஒடிசா

B) காசி – வாரணாசி

C) காமரூபம் – அஸ்ஸாம்

**D) காந்தகார் – பாகிஸ்தான்**

**விளக்கம்:**

**A) கலிங்கம் – ஒடிசா**

**B) காசி – வாரணாசி**

**C) காமரூபம் – அஸ்ஸாம்**

**D) காந்தகார் – ஆப்கானிஸ்தான்**

74. மௌரியர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட பட்டு பொதுவாக____________என அழைக்கப்பட்டது.

A) மல்பரி பட்டு

**B) சீனப் பட்டு**

C) இத்தாலி பட்டு

D) டஸார் பட்டு

**விளக்கம்: மௌரியர் காலத்தில் அரசர்களும், அரசவையினரும் வெள்ளி ஜரிகை வேலைப்பாடுகள் செய்த ஆடைகளை அணிந்தார்கள். பட்டு குறித்தும் அறிந்திருந்தார்கள். பட்டு பொதுவாக சீனப் பட்டு என்றே அழைக்கப்பட்டது. இது மௌரியப் பேரரசில் விரிவான கடல்வழி வணிகம் நடந்ததை சுட்டிக்காட்டுகிறது.**

75. மௌரியர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட கருவிகளின் பயன்பாடு பற்றியக் கூற்றுகளில் சரியானதைக் கண்டறி:

1) வேளாண்மைக்காக காடுகளை பெருமளவில் திருத்துவதில் கோடாரி போன்ற இரும்புக் கருவிகள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டது.

2) மேம்படுத்தப்பட்டு கலப்பைகள் உழவுக்கு உதவின.

3) தரமான ஆணிகளும் கருவிகளும் தச்சு வேலைகள், மர வேலைகள் உள்ளிட்ட கைவினைத்தொழில்களின் தரத்தை மேம்படுத்தின.

A) 1 2 மட்டும் சரி

B) 2 3 மட்டும் சரி

C) 1 3 மட்டும் சரி

**D) அனைத்தும் சரி**

76. கீழ்க்கண்டவற்றுள் சரியான இணையைத் தேர்ந்தெடு:

1) பிரமுகா – வணிகக் குழு

2) ஜேஷ்டா – தலைவர்

3) ஸ்ரேனி – மூத்தவர்

A) 1 மட்டும் சரி

**B) 2 மட்டும் சரி**

C) 3 மட்டும் சரி

D) அனைத்தும் சரி

**விளக்கம்:**

**1) பிரமுகா – மூத்தவர்**

**2) ஜேஷ்டா – தலைவர்**

**3) ஸ்ரேனி – வணிகக் குழு**

77. மௌரிய காலத்தில் வணிகக்குழுக்கிடையே (ஸ்ரேனி) ஏற்பட்ட பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பவர்_______________

A) ஜேஷ்டா

B) பிரமுகா

**C) மஹாசேத்தி**

D) A B இருவரும்

78. மௌரிய காலத்தில் கடல்வாணிபம் கீழ்க்கண்ட எந்த நாட்டுடன் நடைபெற்றது.

A) பர்மா

B) மலாய்த் தீவு

C) இலங்கை

**D) மேற்கண்ட அனைத்தும்**

**விளக்கம்: மௌரிய காலத்தில் பர்மா, மலாய் தீவுக் கூட்டங்கள், இலங்கை ஆகியவற்றோடு கடல்வாணிபம் நடந்தது. எனினும் கப்பல்கள் சிறியவையா, கடற்கரையை ஒட்டிச் செல்பவையாகவே இருந்திருக்கின்றன.**

79. கூற்று 1: மௌரியர் காலத்தில் கடல் கடந்து அயல்நாடு செல்லும் வியாபாரங்கள் வணிகக் குழுக்களால் நடத்தப்பட்டன.

கூற்று 2: இவர்கள் பாதுகாப்பிற்காகக் கூட்டம் கூட்டமாகச் சென்றார்கள். இந்த வணிகக் கூட்டத்திற்கு மஹா–சர்த்தவகா என்ற தலைவர் இருந்தார்.

A) கூற்று 1 சரி, 2 தவறு

B) கூற்று 2 சரி, 1 சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

80. கூற்று 1: மௌரியர் காலத்தில் நாணய முறை பற்றி அறிந்திருந்தாலும், நவீன காலத்திற்கு முந்தைய பொருளாதாரங்களில் பண்டமாற்று முறைதான் பரிமாற்றத்திற்கான வழிமுறையாக இருந்தது.

கூற்று 2: மௌரியப் பேரரசில் தங்க நாணயங்கள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன.

**A) கூற்று 1 சரி, 2 தவறு**

B) கூற்று 2 சரி, 1 சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: மௌரியப் பேரரசில் வெள்ளி நாணயங்கள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன.**

81. நகரங்கள் பொதுவாக____________யை ஒட்டி அமைந்திருந்தன.

A) ஏரிகள்

B) குளங்கள்

C) கடல்கள்

**D) ஆறுகள்**

**விளக்கம்: நகரங்கள் பொதுவாக ஆறுகளை ஒட்டி அமைந்திருந்தன. போக்குவரத்து வசதிக்காக இவ்வாறு அமைக்கப்பட்டிருக்கலாம். இவை அகழிகளால் சூழப்பட்டிரந்தன. பாதுகாப்பிற்காகக் கோட்டைச் சுவர்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றில் அரசாங்கப் பணத்தை வைத்திருக்கும் கருவூலங்கள் இருந்தாலும், வணிக மையங்;கள் என்பதால் மக்களும் வணிகர்களும் செல்வமிக்கவர்களாக இருந்தாலும் எப்போதுமே தாக்குதல் அபாயம் இருந்தது.**

82. மௌரியப் பேரரசின் மாபெரும் தலைநகரம்___________

A) மகதம்

**B) பாடலிபுத்திரம்**

C) காந்தகார்

D) தௌலி

**விளக்கம்: பாடலிபுத்திரம் மௌரியப் பேரரசின் மாபெரும் தலைநகரமாகும். இது கங்கையும் சோன் நதியும் சங்கமமாகும். இடத்தில் ஒரு இணைகரத்தின் வடிவில் இருந்த பெரிய, செல்வமிக்க நகரம் என்று வர்ணிக்கப்படுகிறது.**

83. கூற்று 1: மௌரியப் பேரரசின் மிகப்பெரும் தலைநகரமான பாடலிப்புத்திரமானது கங்கையும் சோன் நதியும் சங்கமமாகும் இடத்தில் ஒரு சதுர வடிவில் இருந்த பெரிய, செல்வமிக்க நகரம் என வர்ணிக்கப்படுகிறது.

கூற்று 2: இது 14 கிலோமீட்டருக்கும் அதிகமான நீளமும், சுமார் இரண்டரை கிலோமீட்டர் அகலமும் கொண்டது. வெளியே பாதுகாப்பிற்காக மரத்தாலான சுற்றுச் சுவர் இருந்தது.

A) கூற்று 1 சரி, 2 தவறு

B) கூற்று 2 சரி, 1 சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

84. மௌரியப் பேரரசின் மாபெரும் தலைநகரமான பாடலிபுத்திரம் பற்றியக் கூற்றுகளில் சரியானதைக் கண்டறி:

1) நகரத்திற்கு 570 வாசல்கள் இருந்தன. 64 கண்காணிப்புக் கோபுரங்கள் இருந்தன.

2) சுவருக்கு வெளியே அகலமான, ஆழமான அகழி இருந்தது. அகழிக்கு ஆற்றிலிருந்து நீர் கொண்டுவரப்பட்டது.

3) பாதுகாப்பிற்காகவும், கழிவுநீர் வடிகாலாகவும் அகழி பயன்பட்டது.

4) நகரம் 50 பேர் கொண்ட ஒரு கழகத்தால் நிர்வகிக்கப்பட்டது. அசோகர் இங்கு பல தூண்கள் கொண்ட அரங்கை நிர்மாணித்து நகரத்தின் கமபீரத்தை அதிகரித்தார்.

A) 1 2 மட்டும் சரி

B) 2 3 4 மட்டும் சரி

**C) 2 3 மட்டும் சரி**

D) அனைத்தும் சரி

**விளக்கம்: நகரத்திற்கு 64 வாசல்கள் இருந்தன. 570 கண்காணிப்புக் கோபுரங்கள் இருந்தன. நகரம் 30 பேர் கொண்ட ஒரு கழகத்தால் நிர்வகிக்கப்பட்டது. அசோகர் இங்கு பல தூண்கள் கொண்ட அரங்கை நிர்மாணித்து நகரத்தின் கமபீரத்தை அதிகரித்தார்.**

85. மௌரியர் காலத்தில் சமஸ்கிருத மொழியும் இலக்கியமும் கீழ்க்கண்ட யாருடைய படைப்பினால் செழுமை பெற்றன.

A) பாணினி

B) காத்யாயனார்

**C) A B இரண்டும்**

D) அப்துர்ரசாக்

**விளக்கம்: மௌரியர் காலத்தில் சமஸ்கிருத மொழியும் இலக்கியமும் இலக்கண ஆசிரியர் பாணினியின் (பொ.ஆ.மு. 500) படைப்புகளாலும், நந்தர்களின் சமகாலத்தவரும், பாணினியின் படைப்பிற்கு உரை எழுதியவருமான காத்யாயனராலும் செழுமை அடைந்தன.**

86. பௌத்த, சமண இலக்கியங்கள் பெரும்பாலும்_____________மொழியில் எழுதப்பட்டன.

A) சமஸ்கிருதம்

B) பாரசீகம்

**C) பாலி**

D) அரபு

**விளக்கம்: பௌத்த, சமண இலக்கியங்கள் பெரும்பாலும் பாலி மொழியில் எழுதப்பட்டன. சமஸ்கிருதத்தில் பல இலக்கியப் படைப்புகள் இக்காலத்தில் பிற்காலப் படைப்புகளில் குறிப்பிடப்பட்டாலும், இன்று கிடைக்கவில்லை.**

87. மௌரியப் பேரரசு காலத்தில் நடத்தப்பட்ட நிகழ்த்துகலைகள் பற்றிக் குறிப்படும் நூல்____________

A) இண்டிகா

B) இயற்கை வரலாறு

**C) அர்த்தசாஸ்திரம்**

D) ஹர்ஷசரிதம்

**விளக்கம்: இசைக்கருவி, பாணர்கள், இசை நடனம், நாடகம் இந்தக் காலகட்டத்தின் நிகழ்த்துக்கலைகள் பற்றி அர்த்தசாஸ்திரம் குறிப்பிடுகிறது. ஆடம்பரப் பொருள்களான நகைகள், தந்த வேலைப்பாடுகள், மர வேலைப்பாடுகள், கல் வேலைப்பாடுகள் ஆகியவை மௌரியக் கலையின் விளைவுகள்தான.**

88. மௌரியப் பேரரசின் கடைசிப் பேரரசர் பிரிகத்ரதா அவரது தளபதி புஷ்யமித்ர சுங்கனால் கொல்லப்பட்ட ஆண்டு________________

A) கி.மு. 285

**B) கி.மு. 185**

C) கி.மு. 385

D) கி.மு. 485

**விளக்கம்: மௌரியப் பேரரசின் கடைசிப் பேரரசர் பிரிகத்ரதா அவரது தளபதி புஷ்யமித்ர சுங்கனால் (சுமார் கி.மு.185 இல்) கொல்லப்பட்டார். பின்னர் புஷ்யமித்ர சுங்கன், சுங்கவம்சத்தை நிறுவினார். இச் சுங்கவம்சம் சுமார் நூறு ஆண்டுகளுக்கும் மேல் ஆட்சியிலிருந்தது.**

89. சுங்கவம்சத்தைத் தோற்றுவித்தவர்____________

A) அஷ்வகோஷர்

B) பிரிகத்ரதா

**C) புஷ்யமித்ரர்**

D) அஜாதசத்ரு

**விளக்கம்: விளக்கம்: மௌரியப் பேரரசின் கடைசிப் பேரரசர் பிரிகத்ரதா அவரது தளபதி புஷ்யமித்ர சுங்கனால் (சுமார் கி.மு.185 இல்) கொல்லப்பட்டார். பின்னர் புஷ்யமித்ர சுங்கன், சுங்கவம்சத்தை நிறுவினார். இச் சுங்கவம்சம் சுமார் நூறு ஆண்டுகளுக்கும் மேல் ஆட்சியிலிருந்தது.**

90. பொருத்துக:

A) பொ.ஆ.மு 530 – 1. சைரஸ் (பாரசீகப் பேரரசர்) படையெடுப்பு

B) பொ.ஆ.மு 362 – 2. அலெக்சாண்டரின் படையெடுப்பு

C) பொ.ஆ.மு 326 – 3. நந்தர்கள் மகதத்தில் தங்களது பேரரசைத் தோற்றுவித்;தல்

D) பொ.ஆ.மு 321 – 4. சந்திரகுப்தர் மௌரியப் பேரரசைத் தோற்றுவித்தல்

**A) 1 3 2 4**

B) 2 3 4 1

C) 1 2 4 3

D) 4 3 2 1

91. சரியான இணையைத் தேர்ந்தெடு:

1) பொ.ஆ.மு 301 – அசோகர் தலைமையில் மூன்றாம் பௌத்த சங்கம் கூடியது

2) பொ.ஆ.மு 297 – சந்திரகுப்தருக்குப் பின் பிந்துசாரர் ஆட்சியில் அமர்தல்

3) பொ.ஆ.மு 250 – சந்திரகுப்தரால் செலியுகஸ் தோற்கடிக்கப்படுதல்

A) 1 மட்டும் சரி

**B) 2 மட்டும் சரி**

C) 3 மட்டும் சரி

D) அனைத்தும் சரி

**விளக்கம்:**

**1) பொ.ஆ.மு 301 – சந்திரகுப்தரால் செலியுகஸ் தோற்கடிக்கப்படுதல்**

**2) பொ.ஆ.மு 297 – சந்திரகுப்தருக்குப் பின் பிந்துசாரர் ஆட்சியில் அமர்தல்**

**3) பொ.ஆ.மு 250 – அசோகர் தலைமையில் மூன்றாம் பௌத்த சங்கம் கூடியது**

92. அசோகரது தூண்களில் உள்ள பிராமி எழுத்துகளுக்கு பொருள் கண்டுபிடித்தவர்________________

A) தாமஸ் சாண்டர்ஸ்

**B) ஜேம்ஸ் பிரின்செப்**

C) சர் ஜான் மார்ஷல்

D) வில்லியம் ஜோன்ஸ்

93. மகதத்தின் முதல் அரசராக அறியப்படுபவர், ஹர்யங்கா வம்சத்தை சேர்ந்த________________

**A) பிம்பிசாரர்**

B) அஜாதசத்ரு

C) அசோகர்

D) மகாபத்ம நந்தர்

94. அலெக்சாண்டர் இந்தியா மீது படையெடுத்து வந்தபோது மகதத்தின் அரசராக இருந்தவர்_______________

A) மகாபத்ம நந்தர்

**B) தன நந்தர்**

C) பிந்துசாரர்

D) பிம்பிசாரர்

95. ______________என்ற இலங்கையில் கிடைத்த, பாலியில் எழுதப்பட்ட விரிவான வரலாற்று நூல் மௌரியப் பேரரசு பற்றி அறிந்துகொள்ள உதவும் முக்கியமான சான்றாகும்.

**A) மகாவம்சம்**

B) தீபவம்சம்

C) பிரமானம்

D) முத்ராராட்சசம்

96. _____________என்ற விசாகதத்தரின் நாடகம் சந்திரகுப்தர் பற்றியும், அவர் மகதப் பேரரசின் அரியணை ஏறியது பபற்றியும் கூறுகிறது.

**A) முத்ராராட்சசம்**

B) ராஜதரங்கிணி

C) அர்த்தசாஸ்திரம்

D) இண்டிகா

97. மெகஸ்தனிஸ் எழுதிய_____________சந்திரகுப்தரின் அரசவையையும், அவரது நிர்வாகத்தையும் விவரிக்கிறது.

**A) இண்டிகா**

B) முத்ராராட்சசம்

C) அஷ்டத்யாயி

D) அர்த்தசாஷ்திரம்

98. _______________நல்ல நிர்வாகம் பற்றிய வழிகாட்டும் நூலாகும்.

**A) அர்த்தசாஸ்திரம்**

B) இண்டிகா

C) ராஜதரங்கிணி

D) முத்ராராட்சசம்